# சாவகச்சேரி நகர சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய சாவகச்சேரி நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி சாவகச்சேரி நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 291,644 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 88,000 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை

### 1.3.4 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| **நகர சபைக் கட்டளைகள் சட்டம்** | |
| 76 ஆம் பிரிவு | நகரசபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் நிர்மாணிக்கப்பட்டிருந்த அனுமதியின்றிய கட்டிடங்கள் மீது சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>**வருடம்** — **அங்கீகரிக்கப்படாத கட்டிட நிர்மாண எண்ணிக்கை**<br>2008 — 18<br>2009 — 35<br>2010 — 27 |
| 159(எ) ஆம் பிரிவு | ஆண்டொன்றில் ரூபா 2,500 இனை கலாச்சார, மத ரீதியான மற்றும் பொது வேலைகளிற்காக செலவிடுவதற்கு சபைக்கு முடிந்நிருந்த போதிலும், ரூபா 12,839 ஆனதோர் தொகை உபசாரச் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. |
| 170(i) ஆம் பிரிவு | வியாபார அனுமதிப்பத்திர கட்டண நிலுவை ரூபா 60,000 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 10,552,010 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 8,654,208 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| (i) | வாடகை மற்றும் வரிகள் | 1,181 | 916 | 5,459 | 1,131 | 903 | 5,644 |
| (ii) | குத்தகை வாடகை | 7,501 | 6,261 | - | 6,961 | 4,729 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 549 | 458 | - | 349 | 130 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 45,466 | 28,812 | 4,741 | 8,109 | 29,497 | 2,088 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 ஆம் ஆண்டிற்காக சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2010 திசெம்பர் 31 இல் ரூபா 2,671,845 முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.2.4 அறவிடப்பட வேண்டிய வருமானம்

முன்னைய காலப்பகுதி தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 10,199,846 வாடகை, வீதவரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கு 2010 திசெம்பர் 31 வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| ஆளுக்குரிய | | | | | | |
| வேதனம் | 35,364 | 21,210 | 14,154 | 31,842 | 23,448 | 8,394 |
| ஏனையவைகள் | 7,975 | 4,685 | 3,290 | 6,476 | 3,157 | 3,319 |
| **உப மொத்தம்** | **43,339** | **25,895** | **17,444** | **38,318** | **26,605** | **11,713** |
| மூலதனச் செலவு | 79,194 | 19,380 | 59,814 | 77,305 | 12,624 | 64,681 |
| **முழு மொத்தம்** | **122,533** | **45,275** | **77,258** | **115,623** | **39,229** | **76,394** |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.3.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவிநிலை மட்டம | 03 | 01 |
| இரண்டாம் மட்டம் | 35 | 29 |
| ஆரம்ப மட்டம் | 84 | 45 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | 16 |
| மொத்தம் | 122 | 91 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,289,523 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 9,442,873 ஆகும்.

### 2.5.2 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 3,633,905 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 121,928 ஆகும்.

### 2.5.3 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேலாக அசைவுறாதிருந்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 241,156 ஆகும்.

## 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 268,784,706 ஆகும்.

## 2.5.5 இணங்காணப்பட்ட இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

நகர சபையினால் பேணப்பட்ட தகவல்கள் மற்றும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் படி ரூபா 13,653 சேதங்கள் மற்றும் இழப்புக்கள் வெளிப்பட்டன.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைத்திந்த பின்வரும் மானியங்கள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

| மானிய வகை | தொகை | மானியத்தின் மோசடி விபரம் |
|---|---|---|
| | ரூபா | |
| பிரசவ சிறுவர் மானியம் | 30,000 | அலுவலக நோக்கத்திற்காக தளபாடக் கொள்வனவு |
| குடியுரிமை மானியம் | 29,804 | கட்டிடத் திருத்தம் |

(ஆ) விலைமதிப்பு திணைக்கள உத்தியோகத்தர்களிற்கு மெத்தைகள் மற்றும் தலையணைகளைக் கொள்வனவு செய்வதற்காக நகர சபை நிதியிலிருந்து ரூபா 10,950 செலவிடப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 450 வீதி விளக்குகளை புதிதாக இணைப்புச் செய்வதற்காக 2009 ஆம் ஆண்டில் மின்சார சபைக்கு முற்பணமாக ரூபா 3,496,878 செலுத்தப்பட்டிருந்ததுடன் குறித்த வேலைகள் முடிவுற்றிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை இது தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

வீதி விளக்குகள் பராமரிப்புச் செலவினத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையுடன்

உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வீதி விளக்குகள் பராமரிப்புச் செலவினமாக பெறப்பட வேண்டியுள்ள ரூபா 5,600 இனை மீளப்பெறமுடியாதுள்ளது.

(ஆ) பேரூந்து தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 427,087 செலவிடப்பட்டிருந்தது. காலநிலையிருந்து பாதுகாப்புப் பெறத்தக்க வகையில் இத் தரிப்பிடங்கள் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை.

(இ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நகரசபையினால் பேணப்பட்டு வருகின்ற அறுவைக் கொட்டில்களிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. அறுவைக் கட்டளைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டவாறு அறுவைக் கொட்டில்களின் எண்ணிக்கை விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயலாற்றல்

கணக்காண்டின் தொடக்கத்தில் நகர சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

நகர சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(அ) பாதீடு

(இ) வாகனப் பாவனை

(ஈ) மானியங்கள்